DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 467/2024

Miscellaneous :

Sessions : DW-3

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தினேஷ் |
| Father / Husband Name | சுப்பிரமணியன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22. 05.2026

**எதிரி தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிட்டியூனியன் பேங்க் மதுராந்தகம் கிளையில் உதவி மேலாளராக பணி செய்து வருகிறேன். எங்களுடைய வங்கி கிளையின் மேலாளருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. எங்கள் மேலாளர் வேறு வேலை தொடர்பாக சென்றுள்ளதால் இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அனுப்பினார். என்னிடம் காட்டப்படும் வழக்கு காட்டப்படும் 000016 என்ற வழக்கு காசோலை எங்கள் வங்கி காசோலைதான். இந்த காசோலையின் முன் பின் காசோலைகளான 000015 மற்றும் 000017 ஆகியவை எப்போது பணமாக்கப்பட்டது என்றால் அந்த 2 காசோலைகளும் தற்போது வரை பணமாக்கப்படவில்லை. இந்த விவரம் எதிரியின் வங்கி கணக்கை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான்.

2. நான் 01.07.2024 முதல் 20.05.2026 வரையான காலகட்டத்திற்கு உரிய எதிரியின் வங்கி கணக்கின் ஸ்டேட்மெண்டை கொண்டு வந்துள்ளேன். அந்த ஸ்டேட்மெண்ட் **(எதிரியின் வங்கி ஸ்டேட்மெண்ட் உண்மை நகல் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 01.07.2024 முன்பு 000015 மற்றும் 000017 ஆகிய காசோலைகள் பணமாக்கப்பட்டதா என்ற விவரம் நான் தற்போது தாக்கல் செய்த ஸ்மெண்ட்டில் துலங்காது என்றால் சரிதான். எதிரி எங்கள் வங்கியில் 2020ம் ஆண்டு தான் கணக்கு துவங்கியுள்ளார். காசோலை புத்தகமும் அப்போது தான் வழங்கப்பட்டுள்ளது. எதிரி வங்கி கணக்கு துவங்கிய தேதி முதல் 01.07.2024ம் தேதி வரையான ஸ்மெண்ட்டை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

சாட்சி எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டு ஸ்ட்மெண்டை உணவு இடைவேளைக்கு பிறகு எடுத்து வருவதாக கூறியதால் முதல் விசாரணை தொடர்ச்சி நிறுத்திவைக்கப்படுகிறது.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 467/2024

Miscellaneous :

Sessions : DW-3

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | தினேஷ் |
|---|---|
| Father / Husband Name | சுப்பிரமணியன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22. 05.2026

**எதிரி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. எதிரி எங்கள் வங்கியில் 20.01.2020 அன்று சேமிப்பு கணக்கு துவங்கியுள்ளார். 20.02.2020 முதல் 30.06.2024 வரையான காலகட்டத்திற்குரிய எதிரியின் வங்கி கணக்கின் ஸ்டேட்மெண்டடை கொண்டு வந்துள்ளேன். **(எதிரியின் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்டின் உண்மை நகல் நீமசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியின் வங்கி கணக்கின் ஸ்டேட்மெண்டை பார்த்ததில் இருந்து அவருக்கு 25 காசோலைகள் அடங்கிய புத்தகம் ஜனவரி 2020 ல் வழுங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 000016 காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளது. 000015 மற்றும் 000017 ஆகிய காசோலைகள் வசூலுக்கு வரவில்லை. 07.02.2022 அன்று 000012 காசோலை வசூலுக்கு வந்துள்ளது. அதன் பிறகு 02.04.2025 அன்று 000019 வசூலுக்கு வந்தள்ளது.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எதிரிக்கு கணக்கு துவங்கியது முதல் தற்போது வரை 2020 ம் ஆண்டு ஒரே ஒரு காசோலை புத்தகம் தான் வழங்கியுள்ளோம் என்றால் சரிதான். எதிரி 2020 முதல் 2025 வரை இந்த காசோலை புத்தகத்தை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். எதிரிக்கு வழங்கப்பட்ட காசோலைகளில் இந்த வழக்கு காசோலை இல்லாமல் வேறு காசோலை ஏதாவது போதிய பணமில்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு காசோலையை தவிர மற்ற காசோலைகளை எதிரி தன்னுடைய பெயரிலேயே பயன்படுத்தியுள்ளார். மீதமுள்ள காசோலைகளை எதிரி தற்போது வரை வங்கியில் திரும்ப செலுத்தவில்லை என்றாலும் அவர் தான் வைத்துள்ளார் என்றாலும் சரிதான்.